P.N. NO 12 நாள் 07/01/12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 7.1.2012

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், ச.கண்ணனூர் மேற்கு கிராமம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தில் 5.1.2012 அன்று மண்டபம் கட்டுமான பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கியதில் மண்ணச்சநல்லூர் வட்டம், திருவெள்ளரை கிராமத்தைச் சேர்ந்த திரு. உடன்சேரி என்பவரின் மகன் கோபி என்கிற விஜயகுமார் மற்றும் ஸ்ரீரங்கம் வட்டம், பெரியகருப்பூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்தானம் என்பவரின் மகன் ரவிசங்கர் ஆகிய இருவரும் படுகாயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த திரு. கோபி என்கிற விஜயகுமார் மற்றும் ரவிசங்கர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் நான்கு பேர் காயம் அடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், திருச்சிராப்பள்ளி மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விபத்தில் காலமான திரு. கோபி என்கிற விஜயகுமார் மற்றும் ரவிசங்கர் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9